**<u>அசல் வழக்கு எண். *87/2009*</u>**

நாள் *11.02.2019*

**Name: *சின்னதம்பி (வா.சா.3 / தரப்பினர் அல்ல)***

*சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.*

***<u>2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>***

நான் வரைவு தயாரிக்கும் ஆவணங்களில் எனது வழக்கறிஞர் பதிவு எண்ணை குறிப்பிடாமல் தயாரிப்பதில்லை என்றால் தற்பொழுது வைத்துள்ள இலட்சையில் (சீல்) உள்ளது. அப்பொழுது வைத்திருந்த இலட்சையில் பதிவு எண் இல்லாமல் இருந்தது. அதனால் தற்பொழுது வரைவு தயாரிக்கும் ஆவணங்களில் எனது வழக்கறிஞர் பதிவு எண் குறிப்பிடப்பட்டு வருகிறது. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்திற்கான விபரங்களை லோகாம்பாள் என்னிடம் சொன்னார். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் வரைவு செய்யும் சமயத்தில் அந்த சொத்திற்கான பட்டா என்னிடம் கொடுக்கப்பட்டது. அந்த பட்டா லோகாம்பாள் பெயரில் இருந்தது. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் ஏறகனவே லோகாம்பாள் அவரது இதர வாரிசுகளுக்கு பிரித்துக் கொடுத்த சொத்துக்கள் போக என்ற வாசகம் உள்ளது. அவ்வாறான பாக அட்டவணை ஏதும் என்னிடம் கொடுக்கப்படவில்லை. என்னிடம் கொடுக்கப்பட்ட பட்டாவை தவிர வேறு ஆவணங்கள் ஏதும் நான் பார்க்கவில்லை. லோகாம்பாளுக்கு வா.சா.ஆ.3 உயிலில் கண்ட சொத்து எவ்வகையில் பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதும் பார்க்கவில்லை, அம்மா வழியில் தனக்கு கிடைத்ததாக லோகாம்பாள் என்னிடம் சொன்னார். அதற்கான ஆவணம் ஏதும் என்னிடம் கொடுக்காததால் அதை பற்றி நான் வா.சா.ஆ.3 உயிலில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் லோகாம்பாள் என் முன்னிலையில் கைரேகை வைத்தார். அதன்பிறகு சாட்சிகள் கையொப்பம் இட்டார்கள். நான்தான் லோகாம்பாளின் இடது கை பெருவிரல் ரேகை என்று எழுதினேன். வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை எழுதி கொடுத்த நபர் லோகாம்பாள்தான் என்பதை உறுதி செய்ய ஆவணம் ஏதும் பார்த்தேனா என்றால் லோகாம்பாளின் வாக்காளர் அட்டை பார்த்தேன். அந்த வாக்காளர் அட்டையின் வரிசை எண் பற்றி மேற்படி வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் லோகாம்பாளின் மூத்த மகன் சாமிதுரையை தவிர இதர மகன்கள் பெயர் பற்றிய விவரம் குறிப்பிடபடவில்லை. அந்த இதர மகன்கள் 2 பேர் என்றும், அவர்களின் பெயரும் சொன்னார்கள். அந்த பெயர்கள் தற்போது நினைவில் இல்லை. அந்த இதர மகன்களுக்கு உயிலில் சொத்து ஒதுக்காததற்கு ஏற்கனவே லோகாம்பாள் இதர சொத்துக்களை கொடுத்துவிட்டதாகவும் உயிலில் கண்ட சொத்துக்கள் தன் ஜீவனத்திற்காக வைத்திருந்ததாகவும் சொன்னார். அந்த விபரத்தை நான் கேட்டதால் சொன்னார். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் எழுதுவதற்கு மொத்தம் 5 நபர்கள் வந்தார்கள். அவர்கள் லோகாம்பாள், சாட்சி கையொப்பம் இட்ட 2 நபர்கள், 1ம் வாதி காமராஜன், மற்றொருவர் அவர்

யாரென்று நினைவில் இல்லை. நான் பதிவு செய்யப்படாத உயில் இதுவரை வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை சேர்த்து இரண்டும், மற்றவைகள் பதிவு செய்யப்பட்டும் உள்ளது. அவ்வாறு பதிவு செய்யப்பட்ட உயில்கள் எத்தனை வரைவு செய்தேன் என்று சரியாக நினைவில் இல்லை. வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை கணினியில் தட்டச்சு செய்து வரைவு தயாரித்து நகல் எடுத்து 1 முறை படித்து காண்பித்த பிறகு வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் லோகாம்பாள் மற்றும் சாட்சிகள் கையொப்பம் இட்டார்கள். வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தை பதிவு செய்துகொள்வது பாதுகாப்பானது என்று நான் லோகாம்பாளிடம் சொன்னேன். நான் பதிவு அலுவலகம் சென்று பதிவு செய்யும் சமயத்தில் உடன் இருப்பதில்லை. லோகாம்பாளை எனக்கு எப்படி தெரியும் என்றால், லோகாம்பாள் எனது பக்கத்து ஊர்க்காரர் மற்றும் 1ம் வாதி காமராஜன் எனது மூத்த வழக்கறிஞரின் வாகன விபத்து வழக்கு சம்மந்தமான கட்சிக்காரர் என்பதால் என்ற வகையில் தெரியும். 1ம் வாதி காமராஜன் எனக்கு நல்ல பழக்கமா என்றால் வழக்கு சம்மந்தமான கட்சிக்காரர் என்ற முறையில் பழக்கம். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் எழுதுவதற்கு முன்பே லோகாம்பாளை எனக்குத் தெரியும், ஆனால் உறவினர் அல்ல. நான் வா.சா.ஆ.3 உயில் ஆவணம் எழுதிய சமயத்தில் பார்வையிட்ட பட்டா மற்றும் வாக்காளர் அட்டை நகல்களை வா.சா.ஆ.3 உயில் ஆவணத்துடன் இணைக்காதற்கு காரணம் உள்ளதா என்றால் நான் அந்த உயில் ஆவணத்தை பதிவு செய்ய சொன்னதால் பதிவு அலுவலகத்தில் பார்த்துக் கொள்வார்கள் என்று இருந்துவிட்டேன். வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் குறிப்பிட்ட தேதியில் அந்த உயில் ஆவணத்தில் கண்ட சொத்திற்கான பட்டா லோகாம்பாள் பெயரில் இல்லையென்றாலும், நான் சொல்வதுபோல் வாக்காளர் அட்டை லோகாம்பாள் பெயரில் வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் கண்ட தேதியில் இல்லையென்றாலும் சரியல்ல. அவ்வாறு ஆவணங்கள் ஏதும் இருப்பின் அதை நான் வா.சா.ஆ.3 உயில் ஆவணத்துடன் இணைத்திருப்பேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.3 உயிலில் கண்ட சொத்துக்களை தனது இரண்டு பேரப்பிள்ளைகள் தன்னை பராமரித்து உணவு வழங்கியதால் அவர்களுக்கு சொத்து வழங்குவதற்காக உயில் எழுத லோகாம்பாள் சொன்னார். வா.சா.ஆ.3 உயில் ஆவணத்தில் உள்ள பெருவிரல் ரேகை லோகாம்பாளுடையது இல்லையென்றால் சரியல்ல. லோகாம்பாள் வாதிகளுக்கு மட்டும் உயில் எழுதி வைக்கவேண்டிய அவசியமில்லையென்றாலும் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக வா.சா.ஆ.3 உயில் ஆவணம் வரைவு தயாரித்து வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்) திரு.ஆர்.பாரதிராஜா, பி.ஏ., பி.எல்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.